பணித்தாள் 6

வகுப்பு: 5 மாணவர் பெயர்:

பாடம்: தமிழ் தலைப்பு: அடுக்குத்தொடர்,இரட்டைக்கிளவி

**கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருந்துமாறு இரட்டைக்கிளவி/ அடுக்குத்தொடர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**



அடர்ந்த காடு. ஒன்றையொன்று துரத்தி விளையாடிக்கொண்டிருந்த குரங்குகள், திடீரெனக் குரலெழுப்பியவாறு, ஒவ்வொரு மரமாக ஏறியும்இறங்கியும் கிளைக்குக் கிளை -------------ச் சென்றன. அவை எழுப்பிய ஓசையினால், பறவைகள் தத்தம் சிறகுகளைப் -------------- வென அடித்துக்கொண்டு பறந்தன. அருகிலிருந்த சிற்றாற்றில், நீர் ----------------- வென ஓடிக்கொண்டிருந்தது. நீர்நிலை தேடிக் ------------------- மாக வந்த யானைகள், அந்த ஆற்றைக்கண்டு, களிநடனமிட்டன. அருகில் வளர்ந்திருந்ததென்னை மரமொன்றிலிருந்த தேங்காய்கள், ---------- எனக் கீழே விழுந்தன. அந்த ஓசையைக் கேட்டு, மிரண்ட யானைக்கன்று ---------- வென ஓட, அருகிலிருந்தமான்கள் அங்குமிங்கும் ---------------ஓடின. சூல்கொண்ட மேகங்கள், ------------ வெனத் திரள, ----------- வென மின்னல் மின்னியது. சற்றுநேரத்தில், -----------வெனமழை பெய்ய, குரங்குகள் மரத்தின் மீது ---------------- வென ஏறின.

**தபதப, துள்ளித் துள்ளி, கூட்டங்கூட்டம், படபட, சலசல, சடசட, கருகரு, பளபள, மடமட, தாவித் தாவி, பொத்து பொத்து**

LIVEWORKSHEETS